**STARTING TIME 01.15 P.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 145/2026**

Deposition of **D.W.1** witnesses for defendant Solemnly affirmed by Tr. S. Gopi, Grade-II Bench Clerk of this court, on 10.04.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : தட்சணாமூர்த்தி Father's Name : சேட்டு

Village : கதவு எண். 147, ஏரிக்கரை தெரு,
பெரிய தென்னல் கிராமம், கீழ்வெண்பாக்கம் அஞ்சல்.

Age :

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்ன பரிகாரம் கேட்டு வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால், தெரியும். நான் என்ன படித்துள்ளேன் என்றால், டிப்ளோமா இன் மெக்கானிக் படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால், விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு சொந்தமாக விவசாயம் நிலம் உள்ளதா என்றால், உள்ளது.

2. எனக்கு எவ்வளவு நிலம் சொந்தமாக உள்ளது என்றால், 2 ஏக்கர் சொந்தமாக உள்ளது. அந்த நிலம் எந்த ஊரில் உள்ளது என்றால், தென்னல் கிராமத்தில் உள்ளது. நான் செங்கல் சூளை தொழிலையும் செய்து வருகிறேன் என்றால், சரிதான். அதேபோல் பலர் நபர்களிடம் சொத்தை குத்தகைக்கு பெற்று செங்கல் சூளை தொழிலையும் செய்து வருகிறேன் என்றால், சரிதான். எத்தனை வருடமாக செங்கல் சூளை தொழிலையும் செய்து வருகிறேன் என்றால், சுமார் 15

வருடங்களாக செய்து வருகிறேன்.

3. செங்கல் சூளை நடத்துவதற்கு பணம் தேவைப்பட்டால் வெளியே பணம் வாங்கியும் செய்வேன் என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து, அதில் உள்ள விவரங்களை தெரிந்துக் கொண்டு தான் கையெழுத்து செய்தேன் என்றால், படித்து பார்க்காமல் தான் கையெழுத்து செய்தேன். அதனால் எனது பிரமாண வாக்குமூலத்தில் என்ன சொல்லப்பட்டுள்ளதே என்று எனக்கு தெரியாது என்றால், சரிதான்.

4. இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி எனக்கு கடந்த 10.04.2024 அன்று ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால், சரிதான். அந்த அறிவிப்பை யார் வாங்கியது என்றால், எனது அம்மா செல்வி வாங்கினார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள கையெழுத்து யாருடையது என்றால், சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு என்னுடையது தான் என்று கூறுகிறார், 2, 3 முறை அதுபோல் வந்தது, அதனால், யார் கையெழுத்து செய்து வாங்கியது என சரியாக தெரியவில்லை. நான் எத்தனை முறை கையெழுத்து செய்து பதிவு தபால் வாங்கினேன் என்றால், நினைவில் இல்லை.

5. வழக்கறிஞர் அறிவிப்பை நான் தான் வாங்கினேன் என்றும், ஆனால் எனது அம்மா வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால், 2, 3 முறை வந்தது, அதனால் சரியாக தெரியவில்லை. வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு நான் 30.04.2024 அன்று பதில் அறிவிப்பை அனுப்பினேன் என்றால், சரிதான். ஆனால் எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 6–ல் நான் அனுப்பிய பதில் அறிவிப்பை மறைத்து வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால், சரிதான்.

6. நான் 30.04.2024 அன்று அனுப்பிய பதில் அறிவிப்பை பெற்றுக் கொண்ட வாதி, 10.05.2024 அன்று ஒரு மறு அறிவிப்பையும் அனுப்பினார் என்றால்,

சரிதான். அந்த மறு அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால், இல்லை.

7. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 1–வது பத்தியில் நான் வாதியிடம் பெற்ற கடனை திரும்ப செலுத்த வேண்டி இவ்வழக்கினை வாதி எனக்கு எதிராக தொடர்ந்துள்ளார் என சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். எனவே, வாதியிடம் கடன் வாங்கியதை ஒப்புக் கொள்கிறேன் என்றால், சரியல்ல.

8. நான் என்னுடைய கையெழுத்தை தமிழில் செய்வேனா அல்லது ஆங்கிலத்தில் செய்வேனா என்றால், தமிழிலும் செய்வேன், ஆங்கிலத்திலும் செய்வேன், பத்திரம் பதிவு செய்யும் போது தமிழில் செய்வேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள வக்காலத்தில் உள்ள கையெழுத்து யாருடையது என்றால், என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள கையெழுத்துக்கள் யாருடையது என்றால், என்னுடையது தான்.

9. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4, 6 அஞ்சல் ஒப்புகை அட்டைகளில் உள்ள கையெழுத்துக்கள் யாருடையது என்றால், என்னுடையது தான். வா.சா.ஆ.4–ல் உள்ள என்னுடைய கையெழுத்துக்கும், வா.சா.ஆ.6–ல் உள்ள என்னுடைய கையெழுத்துக்கும் வேறுபாடுகள் உள்ளது என்றால், சரிதான். நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் தமிழில் கையெழுத்து செய்துள்ள ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால், தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன்.

10. தாவா கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என எனது பதிலுரையிலும், சாட்சியத்திலும் மறுத்து சொல்வதால், அந்த கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்தை நான் எப்போது பார்த்தேன் என்றால், நான் வாதியிடமிருந்து எந்தக் காலத்திலும் பணம் கடனாக வாங்கவே இல்லை,

அதனால் அவர் பெயரில் கடனுறுதி சீட்டையும் எழுதிக் கொடுக்கவில்லை, அந்தக் காரணத்தால் தான் கடனுறுதி சீட்டில் எனது கையெழுத்து இல்லை என சொல்கிறேன். தாவா கடனுறுதி சீட்டை பார்க்காமல் தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என சொல்கிறேனா என்றால், ஆமாம்.

11. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் பணம் வாங்கியதாக உள்ள கையெழுத்து யாருடையது என்றால், சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு என்னுடையது அல்ல என சொல்கிறார். தாவா கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என சொல்வதால், அந்த கடனுறுதி சீட்டையும், எனது ஒப்புக் கொள்ளப்பட்ட கையெழுத்துக்கள் உள்ள ஆவணங்களையும் ஆய்வுக்கு அனுப்ப தயாராக உள்ளேனா என்றால், தயாராக உள்ளேன்.

12. நான் தமிழில் கையெழுத்து செய்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால், எந்தக் கையெழுத்து உண்மை என தெரியும் என்றால், சரிதான். அடுத்த வாய்தா தேதியில் நான் தமிழில் கையெழுத்து செய்த ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால், தயாராக உள்ளேன்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

**ENDING TIME 01.48 P.M.**

Special Subordinate Judge

YUVARAJ

Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.04.10 16:13:04 +0530